


**25. 07. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி மாலத்தீவு அதிபர் டாக்டர் மொகமது ம்யூஸுவுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார். இரண்டுநாள் பயணமாக நாளை இரவு பிரதமர் தமிழகம் வருகிறார்.

2. மாநிலங்களவைக்கு தமிழகத்திலிருந்து திமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள் இன்று பதவி ஏற்றுக்கொண்டனர்.

3. வளர்ச்சி அடைந்த வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விஞ்ஞானிகள் குழுவினர் தொள்ளாயிரம் கிராமங்களை நேரில் ஆய்வு செய்ததாக மத்திய அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் **MBBS., BDS.,** மருத்துவ படிப்புகளுக்கான தர வரிசை பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

5. **Changzhou-**வில் சீன ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை – மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>பிரதமர் மாலத்தீவு</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது நான்கு நாள் அரசு முறை பயணத்தின் இரண்டாவது கட்டமாக இன்று மாலத்தீவின் மாலே நகர் சென்றடைந்தார்.

மாலத்தீவு அதிபர் டாக்டர் மொஹமத் ம்யூஸு வெலானா சர்வதேச விமான நிலையத்திற்கு சிறப்பு நிகழ்வாக நேரில் சென்று பிரதமரை வரவேற்றார்.

இதுகுறித்து தமது சமூகவலைதள பதிவில் மகிழ்ச்சி தெரிவித்த பிரதமர் திரு.நரேந்திரமோடி இந்தியா மாலத்தீவு இடையிலான நட்புறவு வரும் காலங்களில் புதிய உச்சத்தை எட்டும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி பரஸ்பர நலன் சார்ந்த விஷயங்கள் குறித்து அதிபர் ம்யூஸுவுடன் இன்று பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

2024-ஆம் ஆண்டு இருநாடுகளுக்கிடையே எட்டப்பட்ட ஒத்துழைப்பு உடன்படிக்கையின் செயலாக்கம் குறித்து இருதலைவர்களும் ஆராய உள்ளனர்.

இதனிடையே பிரதமர் 2 நாள் பயணமாக நாளை இரவு தமிழகம் வருகிறார்.

தூத்துக்குடியில் 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவதுடன் முடிவடைந்த திட்டங்களையும் அவர் துவக்கிவைக்கிறார்.

தூத்துக்குடியில் 450 கோடி ரூபாய் மதிப்பில் புதிய விமான முனையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைக்கும் பிரதமர், தூத்துக்குடி துறைமுக 6 வழிசாலை பணிகள்,

சேத்தியாதோப்பு - சோழாபுரம் நான்குவழி சாலை விரிவாக்கப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

650 கோடி ரூபாய் மதிப்பில் மதுரை - போடிநாயக்கனூர் ரயில் பாதை மின்மய பணிகள்,

நாகர்கோவில் - கன்னியாகுமரி இரட்டை ரயில்பாதை பணிகள் உள்ளிட்ட ரயில்வே திட்டங்களையும் பிரதமர் தொடங்கிவைக்கிறார்.

இதுகுறித்து எமது தூத்துக்குடி செய்தியாளர்

வாய்ஸ்

தூத்துக்குடியிலிருந்து நாளை இரவு திருச்சி வரும் பிரதமர், திருச்சியில் தங்குகிறார்.

நாளை மறுநாள் காலை திருச்சி விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரம் செல்லும் பிரதமர் மாமன்னன் ராஜேந்திர சோழனின் ஆடி திருவாதிரை விழாவில் பங்கேற்று நினைவு நாணயத்தையும் வெளியிடுகிறார்.

பிரதமரின் வருகையை ஒட்டி அரியலூர் மாவட்டத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ

அரியலூர் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு மீண்டும் திருச்சி விமான நிலையம் வரும் பிரதமர் அங்கிருந்து தனி விமானம் மூலம் புதுதில்லி புறப்பட்டு செல்கிறார்.

பிரதமரின் வருகையை ஒட்டி திருச்சி மாவட்டம் உச்சகட்ட பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

**********

<u>நாடாளுமன்றம்</u>

பீஹார் வாக்காளர் பட்டியல் திருத்த விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் இரண்டு மணி வரையிலும்,

மாநிலங்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

மக்களவை இன்று கூடியதும் 26ஆவது கார்கில் வெற்றி தினத்தை ஒட்டி இப்போரில் இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

அவை உறுப்பினர்கள் சிறிது நேரம் மௌனம் அனுசரித்தனர்.

இதனை தொடர்ந்து அவை தலைவர் கேள்வி நேரத்தை நடத்த முற்பட்டபோது பீஹார் வாக்காளர் பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளை எழுப்பி எதிர்கட்சி உறுப்பினர்கள் அவையின் மைய பகுதியில் குழுமி முழக்கமிட்டனர்.

அவை மாண்பை காக்க வலியுறுத்திய அவைத்தலைவரின் கோரிக்கைக்கு யாரும் செவி மடுக்காததை தொடர்ந்து அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சனை எதிரொலித்ததால் அவை முதலில் நண்பகல் வரையிலும் பின்னர் நாள்முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

**********

<u>மாநிலங்களவை பதவி ஏற்பு</u>

முன்னதாக தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திமுகவின் திரு.வில்சன், திரு.**S.R.**சிவலிங்கம், கவிஞர் சல்மா உள்ளிட்டோர் மாநிலங்களவை உறுப்பினர்களாக இன்று பதவி ஏற்றனர்.

திமுக சார்பில் திரைப்பட நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான திரு.கமல்ஹாசன் மாநிலங்களவை உறுப்பினராக பதவி ஏற்றுக்கொண்டார்.

வாய்ஸ்

மாநிலங்களவையின் புதிய உறுப்பினர்களுக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதனிடையே மழைக்கால கூட்டத்தொடரில், அவை நடவடிக்கைகளை சுமூகமாக நடத்த ஏதுவாக அவைத்தலைவர் திரு.ஓம்.பிர்லா மக்களவையை சேர்ந்த அனைத்து கட்சி தலைவர்களுடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

அவையை சுமூகமாக நடத்துவதற்கான ஒருமித்த கருத்து இக்கூட்டத்தில் எட்டப்பட்டதை அடுத்து வரும் திங்கட்கிழமையிலிருந்து அவை நடவடிக்கைகள் சுமூகமாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிஜேபி காங்கிரஸ் சமாஜ்வாடி, ஐக்கியஜனதாதள், திரிணாமுல் காங்கிரஸ் திமுக உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

**********

<u>சிவ்ராஜ்சிங் சவ்ஹான்</u>

வளர்ச்சி அடைந்த வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் குழு, தொள்ளாயிரம் கிராமங்களை முதல் முறையாக ஆய்வு செய்ததாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதில் அளித்த அவர், இக்கிராமங்களின் வேளாண் நிலவரங்கள் குறித்த தகவல்களை இவ்விஞ்ஞானிகள் சேகரித்ததாக எடுத்துரைத்தார்.

மண்வளம், ஊட்டசத்து, போன்றவை குறித்து இக்குழுவினர் விவசாயிகளுக்கு அறிவுறுத்தியதோடு பயிர், பண்ணை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து அவர்களிடம் விவரித்ததாகவும் அமைச்சர் திரு.சவ்ஹான் குறிப்பிட்டார்.

**********

ராஜ்நாத்சிங்

பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு முகமையின் சார்பில் ட்ரோன் மூலமான ஏவுகணை பரிசோதனை இன்று ஆந்திர மாநிலத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தமது சமூகவலைதளத்தில் இத்தகவலை பகிர்ந்ததோடு இந்தியாவின் ராணுவ திறன்களுக்கு இது பெரும் உத்வேகமாக திகழ்வதாக கூறியுள்ளார்.

கர்னூலில் ஆளில்லா ட்ரோன் மூலம் மிக துல்லியமாக தனது இலக்கை இந்த ஏவுகணை தாக்கியதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

**********

குடியரசு துணைத்தலைவர்

குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்காக மாநிலங்களவையின் பொதுச்செயலர், தேர்தல் நடத்தும் அலுவலராக, நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கான உத்தரவை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

மத்திய சட்ட நீதித்துறை அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து தேர்தல் ஆணையம் இம்முடிவை மேற்கொண்டுள்ளது.

இதேபோல் மாநிலங்களவை செயலக துணைச்செயலர் மற்றும் இயக்குனர் ஆகிய இருவரும் துணை தேர்தல் நடத்தும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் சாசனத்தின் 324 பிரிவின் கீழ் தேர்தல் ஆணையம், குடியரசு துணைத்தலைவர் தேர்விற்கான நடைமுறைகளை மேற்கொண்டுள்ளது.

**********

சர்பானந்த சோனோவால்

நம் நாட்டின் துறைமுகங்களில் சராசரி கப்பல்களின் சரக்கு கையாளும் காலத்திறன் நான்கு நாட்களிலிருந்து ஒருநாளுக்கும் குறைவாக உயர்ந்துள்ளதாக மத்திய கப்பல் நீர்வழித்துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கடல்சார் நிதி உச்சிமாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், பெரிய துறைமுகங்களில் சரக்கு கையாளும் திறன் 70 சதவிகிதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டார்.

வணிகர்கள் கப்பல் மசோதா மற்றும் கடலோர கப்பல் மசோதா ஆகியவற்றின் மூலம் நாட்டின் கப்பல் சரக்கு கையாளும் திறன் அதிகரித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இதனிடையே கப்பல் சார்ந்த ஆவணங்களை எளிமைபடுத்துவதற்கான சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**********

தரவரிசை

தமிழ்நாட்டில் **MBBS., BDS.,** மருத்துவ படிப்புகளுக்கான தர வரிசை பட்டியல் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

நீட் தேர்வில் 665 மதிப்பெண் பெற்ற நெல்லை மாணவர் சூரிய நாராயணன் முதல் இடத்தை பெற்றுள்ளார்.

சேலத்தை சேர்ந்த மாணவர்கள் அபினீத் நாகராஜ் 2ஆவது இடத்தையும்,

ஹிருதிக் விஜயராஜா 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

முன்னதாக சென்னையில் இன்று தரவரிசை பட்டியலை வெளியிட்டு பேசிய மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் முதற்கட்ட கலந்தாய்வு வரும் 30ஆம் தேதி தொடங்கும் என்றார்.

வாய்ஸ்

**********

உதய நிதி

தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை துணை முதலமைச்சர் திரு.உதய நிதி ஸ்டாலின் சென்னையில் இன்று வழங்குகிறார்.

**********

வானிலை

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

நீலகிரி தேனி தென்காசி கன்னியாகுமரி மாவட்டங்கள்,

கோவை திருநெல்வேலி மாவட்ட மலைபகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வங்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று வங்கதேச கடல் பகுதியில் நிலவுகிறது.

இந்நிலையில் மகராஷ்டிர கேரள கடலோர பகுதிகளுக்கு அப்பால் அரபிக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

**********

அருவி

இந்நிலையில் சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோவை மாவட்டம் ஆழியாறு அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்க விடுக்கப்பட்டுள்ளது.

உதகை சுற்றுவட்டார பகுதியில் காற்றுடன் சாரல் மழை பெய்வதால் தொட்டபெட்டா காட்சிமுனை இன்று ஒருநாள் மூடப்பட்டுள்ளது.

குற்றால அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக 6ஆவது நாளாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

**********

இருவரி

நாகை மாவட்டத்தில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் என்பதை வலியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை காவல் கண்காணிப்பாளர் திரு.செல்வகுமார் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதில் 500க்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் 4 கிலோ மீட்டர் தூரம் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி ஊர்வலமாக சென்றனர்.

**********

பேட்மிண்டன்

**Changzhou**-வில் சீன ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் ரான்கிரெட்டி சிராக்ஷெட்டி இணை – மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் ஒற்றையர் காலிறுதியில் இன்று இந்தியாவின் உன்னாட்டி ஹூடா தோல்வியடைந்தார்.

**********

கிரிக்கெட்

மான்செஸ்டரில் இந்தியாவிற்கு எதிரான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய 2-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 225 ரன் எடுத்திருந்தது.

இந்தியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 358.

3ஆம் நாள் ஆட்டம் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

**********